# RK IAS ACADEMY

THE BEST ACADEMY FOR UPSC | TNPSC | TNUSRB | TNFUSRC

# TNPSC GROUP I, II, IIA, IV - 2025

# நடப்பு நிகழ்வுகள் (MARCH- 29, 30)

**MADURAI RK IAS ACADEMY**

NO 128, Second Floor (KFC Building), K K Nagar,

Opposite District Court, Madurai-625020.

**9843838779, 9159962788**

**Detailed Answer**

**& Discussion available**

1. எந்த மாநிலம் ஆயுஷ்மான் பாரத் இலவச மருத்துவ காப்பீட்டு திட்டத்தில் இணையவில்லை

A) தமிழ்நாடு B) மேற்கு வங்காளம் C) கேரளா D) கர்நாடகா

Which state has not joined the Ayushman Bharat free health insurance scheme?

A) Tamil Nadu B) West Bengal C) Kerala D) Karnataka

1. ஆயுஷ்மான் பாரத் இலவச மருத்துவக் காப்பீடு திட்டத்தில் **மேற்கு வங்கம்** தவிர அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் இணைந் துள்ளன என்று மத்திய சுகாதாரத் 'துறை அமைச்சர் ஜெ.பி.நட்டா தெரிவித்தார்.
2. கடந்த 2018-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட 'ஆயுஷ்மான் பாரத்- பிரதமரின் மக்கள் ஆரோக் கிய திட்டத்தின்கீழ்' தகுதியுள்ள குடும்பங்களுக்கு ஆண்டுக்கு ரூ.5 லட்சம் வரை இலவச மருத்துவக் காப்பீடு வழங்கப்படுகிறது.

2. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இந்திய கடல் வழி சரக்குப் போக்குவரத்து சட்டம் எந்த ஆண்டு நிறைவேற்றப்பட்டது

A) 1915 B) 1925 C) 1935 D) 1945

In which year was the Indian Maritime Transport Act passed during the British rule?

A) 1915 B) 1925 C) 1935 D) 1945

1. மக்களவையில் கடல்வழி சரக்குப் போக்குவ ரத்து மசோதா நிறைவேற்றப்பட்டது.
2. கடந்த ஆண்டு ஆகஸ்ட் 9-ஆம் தேதி கடல்வழி சரக்குப் போக் குவரத்து மசோதா 2024 மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டது.
3. கடந்த 1925-ஆம் ஆண்டின் இந்திய கடல்வழி சரக்குப் போக்கு வரத்துச் சட்டத்துக்கு மாற்றாக, இந்த மசோதாவை மத்திய அரசு கொண்டு வந்தது.

3. தமிழ்நாடு அரசு யாருடன் இணைந்து ரூ. 1000 கோடி மதிப்பீட்டில் வாழ்ந்து காட்டுவோம் 3.0 திட்டத்தை தொடங்குகிறது

A) ஐநா B) உலக வங்கி

C) உலக சுகாதார நிறுவனம் D) ஆசிய வளர்ச்சி வங்கி

Tamil Nadu government is launching the Rs. 1000 crore Living and Showing 3.0 project in collaboration with whom?

A) UN B) World Bank

C) World Health Organization D) Asian Development Bank

1. தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் (TNRTP) எனப்படும் வாழ்ந்து காட்டுவோம் திட்டமானது (VKP), உலக வங்கி துணையுடன், 2017 -ல் தொடங்கப்பட்டு, ஊரக மேம்பாட்டுத் துறை மற்றும் ஊராட்சியால் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டமாகும்.
2. இத்திட்டத்திற்கென உலக வங்கியும், தமிழ்நாடு அரசும் 70 : 30 என்ற பங்களிப்பில், 919.73 கோடி ரூபாய், அதாவது (123.74 டாலர்) ஒதுக்கீடு செய்துள்ளன.
3. இத்திட்டமானது, தொழில் மேம்பாடு, நிதியுதவியை அணுகும் வாய்ப்பு மற்றும் தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்துதல் வழியாக ஊரக சமூகங்களை நிலையாகக் கட்டமைத்து, செல்வவளத்தைப் பெருக்குவதன் மூலம், வறுமை ஒழிப்பையும் தாண்டிய மேம்படுத்தப்பட்ட நுட்பங்களைப் (வழிமுறைகள்) பயன்படுத்தி, ஊரக மாற்றத்தை ஏற்படுத்துவதை தொலைநோக்காகக் கொண்டுள்ளது

4. பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட மியான்மர் நாட்டிற்கு எந்த திட்டத்தின் பெயரில் இந்திய ராணுவம் மருத்துவ உதவிகளை வழங்குகிறது

A) ஆப்ரேஷன் சக்தி B) ஆபரேஷன் பிரம்மா

C) ஆப்பரேஷன் மியான்மர் D) ஆப்ரேஷன் ஜக்னீத்

Under which scheme is the Indian Army providing medical assistance to earthquake-hit Myanmar?

A) Operation Shakti B) Operation Brahma

C) Operation Myanmar D) Operation Jagneet

1. மார்ச் 28, 2025 அன்று மியான்மரைத் தாக்கிய பேரழிவு தரும் பூகம்பத்தை அடுத்து, இந்திய ராணுவம், **'ஆபரேஷன் பிரம்மா'**-இன் கீழ், அவசர மனிதாபிமான உதவிகளை வழங்க ஒரு சிறப்பு மருத்துவ பணிக்குழுவை நியமிக்கிறது.
2. லெப்டினன்ட் **கர்னல் ஜக்னீத் கில்** தலைமையிலான 118 பேர் கொண்ட குழு, அத்தியாவசிய மருத்துவ உபகரணங்கள் மற்றும் பொருட்களுடன் விரைவில் மியான்மருக்குப் புறப்பட உள்ளது.
3. வான்வழி ஏஞ்சல்ஸ் பணிக்குழு பேரழிவால் பாதிக்கப்பட்ட மண்டலங்களில் மேம்பட்ட மருத்துவ மற்றும் அறுவை சிகிச்சை பராமரிப்பை வழங்க பயிற்சி மற்றும் உபகரணங்களைக் கொண்டுள்ளது.

5. உலக அளவில் வாகனம் ஓட்டுவதற்கு பாதுகாப்பான நாடு எது

A) இந்தியா B) அமெரிக்கா C) நார்வே D) தென்னாப்பிரிக்கா

Which country is the safest to drive in the world?

A) India B) America C) Norway D) South Africa

1. உலகெங்கிலும் 53 நாடுகளில் 'ஜுடோபி' அமெரிக்க ஓட்டுநர் பயிற்சி நிறுவனம் மேற்கொண்ட ஆய்வின் உலகின் வாகனம் ஓட்டுவ தற்கு மிகவும் ஆபத்தான நாடாக தென்னாப்பிரிக்கா இடம் பெற்றுள்ளது.
2. இந்த தரவரிசையில், அமெரிக்கா மற்றும் இந்தியா முறையே 3 மற்றும் 5-ஆவது ஆபத்தான நாடு களாகபட்டியலிடப்பட்டுள்ளன.
3. வாகனம் ஓட்டுவதற்கு உலகின் பாதுகாப்பான நாடாக நார்வே தொடர்ந்து 4-ஆவது ஆண்டாக நீடிக்கிறது. தென்னாப்பிரிக்கா தொடர்ந்து 2-ஆவது ஆண்டாக ஆபத்தான நாடாகத் திகழ்கிறது.

6. நிர் பயா நிதி எந்த ஆண்டு தொடங்கப்பட்டது

A) 2011 B) 2012 C) 2013 D) 2014

In which year was Nirbhaya Fund launched?

A) 2011 B) 2012 C) 2013 D) 2014

1. **நிர்பையா நிதி** (Nirbhaya Fund) என்பது 2013ஆம் ஆண்டு இந்திய ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையில் இந்திய அரசால் அறிவிக்கப்பட்ட இந்திய ரூபாயில் 1000 கோடியில் தோற்றுவிக்கப்பட்ட மூலதான நிதியாகும்.
2. **அச்சமின்றி** எனப் பொருள்படும் "நிர்பையா" என்பது 2012ஆம் ஆண்டு இந்தியத் தலைநகர் தில்லியில் பாலியல் வன்கொடுமையினால் பாதிக்கப்பட்டவருக்கு வழங்கப்பட்ட புனைபெயர் ஆகும்.
3. இந்த நிதியின் கீழ், 2024-25 நிதியாண்டு வரை மொத்தம் ரூ.7712.85 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது, இதில் ரூ.5846.08 கோடி பயன்படுத்தப்பட்டுள்ளது , இது மொத்த ஒதுக்கீட்டில் கிட்டத்தட்ட 76% ஆகும்.

7. இந்திய கடற்படை எந்தத் திட்டத்தின் கீழ் வெளிநாட்டு வீரர்களுக்கு கடற்படை சார்ந்த பயிற்சி வழங்குகிறது

A) மகா சாகர் B) சாகர் C) சுனைனா D) ஐஓஎஸ்

Under which scheme does the Indian Navy provide naval training to foreign soldiers?

A) Maha Sagar B) Sagar C) Sunaina D) IOS

1. இந்திய கடற்படையின் **'சாகர்'** திட்டத்தின்கீழ் 9 நாடுகளைச் சேர்ந்த வீரர்களுக்கு கேரள மாநிலம் கொச்சியில் உள்ள கடற்படை சார்ந்த பயிற் சிப் பள்ளிகளில் பயிற்சி வழங்கப் பட்டு வருகிறது.
2. கொமொரோஸ், கென்யா, மடகஸ்கர், மாலத்தீவு, மோரீ ஷஸ், மொசாம்பிக், செஷெல்ஸ், இலங்கை மற்றும் தான்சானியா ஆகிய 9 நாடுகளைச் சேர்ந்த 44 வீரர்கள் கடந்த நான்கு நாள்க ளாக பயிற்சிபெற்று வருகின்றனர்.

8. பின்வரும் கூற்றுக்களில் எது தவறு

A) தெலங்கானா - குடிபடுவா விழா

B) அசாம் - ரோங்காலி பிஹு விழா

C) வங்காளம் - போயிலா போய்ஷாக் விழா

D) கஷ்மீர - நவரேஹ் விழா

Which of the following statements is incorrect?

A) Telangana - Kudipadua festival

B) Assam - Rongali Bihu festival

C) Bengal - Poila Poishak festival

D) Kashmir - Navareh festival

1. கர்நாடகத்திலே, ஆந்திராவிலே, தெலங்கானாவிலே **உகாதிப் பண்டிகை** மிகவும் கோலாகலத்தோடு கொண்டாடப்பட்டு வருகின்றது.
2. மகாராஷ்டிரத்திலும் **குடிபடுவா** கொண்டாடப்படுகிறது. அசாமில **ரோங்காலி பிஹு**, வங்காளத்தில் **போயிலா போய்ஷாக்**, கஷ்மீரத்திலே **நவரேஹ்** விழாக்கள் கொண்டாடப்படும்.

9. "மேக் இன் இந்தியா" எந்த ஆண்டு தொடங்கப்பட்டது

A) செப்டம்பர் 25, 2014

B) செப்டம்பர் 25, 2015

C) செப்டம்பர் 25, 2016

D) செப்டம்பர் 25, 2017

In which year "Make in India" was launched

A) September 25, 2014

B) September 25, 2015

C) September 25, 2016

D) September 25, 2017

1. "மேக் இன் இந்தியா" முயற்சி தொடங்கப்பட்டதிலிருந்து இந்தியாவின் பாதுகாப்பு உற்பத்தி அசாதாரண வேகத்தில் வளர்ந்து, 2023-24 நிதியாண்டில் ரூ 1.27 லட்சம் கோடியை எட்டி சாதனை படைத்துள்ளது.
2. ஒரு காலத்தில் வெளிநாட்டு விநியோகஸ்தர்களை நம்பியிருந்த நாடு, இப்போது உள்நாட்டு உற்பத்தியில் வளர்ந்து வரும் சக்தியாக நிற்கிறது, உள்நாட்டு திறன்கள் மூலம் அதன் ராணுவ வலிமையை வடிவமைக்கிறது. இந்த மாற்றம் தற்சார்புக்கான வலுவான உறுதிப்பாட்டைப் பிரதிபலிக்கிறது.

**"இந்தியாவில் தயாரிப்போம்" மூன்று நோக்கங்களைக் கொண்டிருந்தது**

1. உற்பத்தித் துறையின் வளர்ச்சி விகிதத்தை ஆண்டுக்கு 12-14% ஆக அதிகரிப்பது;
2. 2022 ஆம் ஆண்டுக்குள் பொருளாதாரத்தில் 100 மில்லியன் கூடுதல் உற்பத்தி வேலைகளை உருவாக்குவது;
3. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உற்பத்தித் துறையின் பங்களிப்பு 2022 ஆம் ஆண்டுக்குள் 25% ஆக அதிகரிக்கப்படுவதை உறுதி செய்வது (பின்னர் 2025 என திருத்தப்பட்டது).

10. மக்கள் ஆபத்து அல்லது மன அழுத்தம் அனைத்து வகையான அவசர நிலைகளுக்குமான ஒற்றை அவசர எண் எது?

A) 112 B) 118 C) 1098 D) 111

Which is the single emergency number for all types of emergencies such as public danger or stress?

A) 112 B) 118 C) 1098 D) 111

1. அவசரகால நடவடிக்கை ஆதரவு அமைப்பு : அவசரகால நடவடிக்கை ஆதரவு அமைப்பு என்பது அனைத்து வகையான அவசரநிலைகளையும் கையாள **ஒற்றை அவசர எண் - 112** உடன் மத்திய அரசால் தொடங்கப்பட்ட ஒரு ஒருங்கிணைந்த அவசர சேவையாகும்.
2. மக்கள் அழைப்புகள், எஸ்எம்எஸ், மின்னஞ்சல், எஸ்ஓஎஸ் சிக்னல்கள் அல்லது ஈஆர்எஸ்எஸ் இணைய போர்டல் மூலம் உதவியை நாடலாம்.